# போராட்ட களம் பல கண்டு, சாதனைகள் படைத்த
# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின்
# 15வது மாநில மாநாடு
## 2016 ஆகஸ்ட் 13,14,15 மற்றும் 16 திருவண்ணாமலை

அன்புடையீர் வணக்கம்,

ஒன்றுபடுவோம்! போராடுவோம்! வெற்றிபெறுவோம்! - என்ற முழக்கத்துடன் 1970 மே திங்களில் சிஐடியு உதயமான அதே ஆண்டில் நவம்பர் திங்களில் தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு துவங்கப்பட்டு கடந்த 46 ஆண்டுகளாக வீறுநடைபோட்டு வருகிறது.

நவீன தாராளமயக் கொள்கையை மின்துறையில் அமலாக்கல் என்ற பெயரால் 2003 மின்சார சட்ட விதிகளை தமிழக மின்வாரியத்தில் அமல்படுத்தி, சிறப்பாக செயல்படும் தமிழக மின்வாரியத்தை தனியார்மயமாக்கி சீரழிக்கச் செய்யும் முயற்சியை இதுவரை தடுத்து நிறுத்தி வரும் அமைப்பு **மின்ஊழியர் மத்திய அமைப்பு.**

சேவைத் துறையாம் மின்துறையை பொதுத்துறையாக பாதுகாத்திடவும், மின்ஊழியர்கள் நலன் தமிழக மக்களின் நலன் காத்திடவும் மத்திய அமைப்பு நடத்திய போராட்டங்கள் ஏராளம், ஏராளம். மத்தியில் ஆண்ட காங்கிரஸ் மற்றும் பி,ஜே.பி அரசுகள் கடைபிடிக்கும் மக்கள் - தொழிலாளி விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக சிஐடியு உள்ளிட்ட தொழிற் சங்கங்கள் நடத்திய வேலை நிறுத்தம் உள்ளிட்ட அனைத்து போராட்ட நடவடிக்கைகளையும் மின்ஊழியர்கள் மத்தியில் முழுமையாக கொண்டு சென்ற அமைப்பு **மின்ஊழியர் மத்திய அமைப்பு.**

### மின்சார உற்பத்தி

தமிழக மின்வாரிய ஊழியர்களின் நலன்காப்பது மட்டுமின்றி மின்வாரியத்தை எதிர்நோக்கியுள்ள 2 கோடியே 60 லட்சம் மின்நுகர்வோர்கள் தொழிலாளர்கள் உள்ளிட்ட தமிழக மக்களின் தேவைக்கேற்ப மின்சாரத்தை உற்பத்தி செய்து தடையற்ற தரமான மின்சாரத்தை தமிழக மக்களுக்கு அளிக்க வேண்டும் என போராடி வரும் அமைப்பு **மின்ஊழியர் மத்திய அமைப்பு.**

### மின்கட்டண உயர்வு

தமிழக மக்களுக்கு தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்து, அநியாய விலையில் மின் கொள் முதலை கைவிட்டு, நிர்வாக திறமையை அதிகரித்து, ஊதாரித்தனமாக செலவுகளை கைவிட்டு நிதிஇழப்பை சரி செய்வதன் மூலம் மத்திய - மாநில அரசுகள் தேவையான மானியத்தை அளித்து மின்வாரிய கடனை ஈடுகட்ட வேண்டும் எனவும் மக்களுக்கு நிதிச் சுமையை உருவாக்கும் மின் கட்டண உயர்வை அறவே கைவிட வேண்டுமென வாதாடும் அமைப்பு - **மின்ஊழியர் மத்திய அமைப்பு.**

### விவசாய மின்இணைப்பு

தமிழக விவசாயிகள் சேற்றிலே கை வைத்தால் தான் நாட்டு மக்களுக்கு சோறு என்று சொல்லும் தொழிலாம் விவசாய தொழிலுக்கு பாசன வசதியை உறுதிப்படுத்தும் விவசாய மின்இணைப்புகளை உடனே வழங்கிட வேண்டுமென வாதாடும் அமைப்பு **மின்ஊழியர் மத்திய அமைப்பு.**

### பணியாளர் நலன்

தமிழக மின்வாரிய ஊழியர்களுக்க ஊதிய உயர்வு வழங்கும் போதெல்லாம் பணிச்சுமையை அதிகமாக்கி ஊழியர்களின் எண்ணிக்கையை குறைக்கக் கூடாது என்று குரல் கொடுக்கும் அமைப்பு **மின்ஊழியர் மத்திய அமைப்பு.**

தமிழக மின்வாரியத்தில் பணியாற்றும் பொறியாளர்கள், அதிகாரிகள், ஊழியர்கள் உட்பட ஒரு நியாயமான ஊதிய உயர்வை பெற்றுத் தரும் அமைப்பு **மின்ஊழியர் மத்திய அமைப்பு.**

### ஒப்பந்த தொழிலாளர் நிரந்தரம்

மின்வாரியத்தில் ஊதிய உயர்வு என்றால் நிரந்தர தொழிலாளர்களுக்கு என்ற வரலாற்றை மாற்றி விநியோகப் பிரிவில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு, தமிழக பொதுப் பணித்துறை ஊழியர்களுக்கு

அளிக்கும் கூலியை வழங்க வேண்டும் என்ற சரத்தையும், சமவேலைக்கு சம ஊதியம் என்ற தீர்ப்பினை ஏற்று அனல் மின்நிலையத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு கூலியும், பணி நிரந்தரமும் பெற்றுத் தந்த அமைப்பு - **மின்ஊழியர் மத்திய அமைப்பு.**

## பகுதிநேர பணியாளர் நலன்

2014 ஆம் ஆண்டு நிரந்தர ஊழியர்களக்கு ஊதிய உயர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட போது மின் வாரியத்தில் பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களுக்கும் அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி, ஆண்டு உயர்வு, போனஸ் + கருணைத் தொகை போன்ற உரிமைகளை பெற்றுத் தந்த அமைப்பு - **மின்ஊழியர் மத்திய அமைப்பு.**

தமிழக மின்வாரியத்தில் விதவைகள், தலித் பெண் ஊழியர்களாக பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களுக்கு சமூக அந்தஸ்தை பெற்று தரும் வகையில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தி அங்கீகரிக்கப்பட்ட பகுதி நேர ஊழியர்கள் என்ற கேட்டகிரியை உருவாக்கி அவர்களுக்கு பணி நிரந்தரத்தை பெற்று தந்த அமைப்பு **மின்ஊழியர் மத்திய அமைப்பு.**

## காலிப்பணியிடம்

மின்வாரியத்தில் ஏற்படும் காலிப்பணி இடங்களை நிரப்பி மக்கள் சேவையை தொடர்ந்திட வேண்டும் என்று வலியுறுத்தியதன் விளைவாக கடந்த 40 ஆண்டு காலத்தில் 60,000க்கும் மேற்பட்ட ஒப்பந்த, தினக்கூலி, என்.எம்.ஆர் தொழிலாளர்களை பணி நிரந்தரப்படுத்தியும் ஐடிஐ உள்ளிட்டு 20,000க்கும் மேற்பட்ட நேரடி பணிநியமனம் மூலமும் காலிப்பணியிடங்களை நிரப்பிய அமைப்பு **மின்ஊழியர் மத்திய அமைப்பு.**

## கேட்டகிரி சங்கமல்ல...

மின்ஊழியர் மத்திய அமைப்பை பொருத்த வரையில் ஏரோ ஒரு பிரிவுக்கான தொழிற் சங்கம் என்ற நிலையை மாற்றுகின்ற வகையில் அதிகாரிகள், பொறிஞர்கள், களப்பிரிவு, தணிக்கை பிரிவு, பண்டகசாலை பிரிவு, வரைவாளர் பிரிவு போன்ற அனைத்து பகுதி ஊழியர்களின் கோரிக்கைகளை கையில் எடுத்து தீர்வு காணும் அமைப்பு **மின்ஊழியர் மத்திய அமைப்பு.**

மின்வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களின் புதிய கோரிக்கைகளை பெற்றுத் தருவதோடு போராடிப் பெற்ற உரிமைகளை காக்கும் அமைப்பாக செயலாற்றி வரும் அமைப்பு **மின்ஊழியர் மத்திய அமைப்பு.**

அதாவது அவசரநிலை கோலோச்சிய போதும் மின்வாரிய ஊழியர்களுக்கு போனஸ் அளித்திட வேண்டும் என்று கோரிக்கை அட்டை அணிந்து உரிமையை உரக்கச் சொல்லிய அமைப்பு **மின்ஊழியர் மத்திய அமைப்பு.**

1976 - 77 கால கட்டத்தில் வழக்கமாக பெரும் தீபாவளி முன்பணத்தை தீபாவளிக்கு முன்னரே அளித்திட வேண்டும் என்று ஓங்கி ஒலித்ததன் காரணமாக 5000க்கும் மேற்பட்டோர் சிறை சென்று உரிமையை காத்த அமைப்பு **மின்ஊழியர் மத்திய அமைப்பு.**

நிலையாணை விதிகளையும், நன்னடத்தை விதிகளையும் ஒன்றாக இணைத்து சாதாரண ஊழியர்களை பழிவாங்கும் நிலமையை உருவாக்கிய போது அதை தடுத்து நிறுத்திய அமைப்பு **மின்ஊழியர் மத்திய அமைப்பு.**

மின்வாரிய ஊழியர்களின் கோரிக்கைகளுக்கும், உரிமைகளுக்கும் குரல் கொடுக்கின்ற அதே நேரத்தில் புதிய நவீன தாராளமயக் கொள்கை அமலாக்கம் என்ற பெரால் இந்திய தொழிலாளிகளை நவீன கொத்தடிமைகளாக்க அரசுகள் முயன்ற போதெல்லாம் அதற்கு எதிராக நடைபெற்ற வேலை நிறுத்தம் உள்ளிட்ட இயக்கங்களில் அரசியல் பின்புலத்தோடு முன்னணிப் படையாக இருந்ததோடு மட்டுமல்லாமல் மின்வாரியத்தில் தொழிற் சங்கங்கள் மத்தியில் ஒற்றுமையை கட்டுவதில் முனைப்புக் காட்டிய அமைப்பு **மின்ஊழியர் மத்திய அமைப்பு.**

## 15வது மாநில மாநாட்டை வெற்றி பெறசெய்வீர்.

தமிழக மின்வாரியத்தில் போராட்ட களம் பல கண்டு மின்நுகர்வோர், மின்வாரிய ஊழியர்களுக்காக சாதனைகள் பலபடைத்த **தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் 15வது மாநில மாநாடு தீபநகரமாம் திருவண்ணாமலையில் ஆகஸ்ட் திங்கள் 13,14,15 மற்றும் 16 தேதிகளில் நடைபெற உள்ள மாநில மாநாடு பலவகைகளிலும் வெற்றிபெற தாங்கள் பேராதரவினையும், தாராள நிதியுதவியையும் அளித்து மாநில மாநாட்டை வெற்றி பெறச் செய்ய வேண்டுகிறோம்.**

இவண்
வரவேற்புக்குழு
தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு
திருவண்ணாமலை

